# பத்திரிக்கை செய்தி குறிப்பு

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தாலூக்கா கிழக்கு பெரியார் தெரு, எண்.64/2, த/பெ. M பெரியசாமி என்பவரின் மகன் P.குமார் என்பவர் தாராபுரம் தாலுக்கா மணக்கடவு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக பிரிவு அலுவலகத்தில் இளமின்பொறியாளர் திரு.கன்னிமுத்து என்பவரை அணுகி தனக்கு பெயரில் இருக்கும் வீட்டு மின் இணைப்பு (Tariff 1-A) ஐ வணிக வேளாண் மின் இணைப்பாக (Tariff –III A1) மாற்ற வேண்டி 07.12.2018-ம் தேதி விண்ணப்பித்திருந்தார். மேற்படி விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இளமின்பொறியாளர் திரு.கன்னிமுத்து வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வந்தார். மேலும் மேற்படி மின் இணைப்பை மாற்றித்தர ரூ.2,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பி விட்டார். மேலும் 11.12.2018-ம் தேதி புகார்தாரர் மேற்படி இணைப்பு மாற்றம் சம்பந்தமாக இளம் மின் பொறியாளரை மீண்டும் சென்று சந்தித்த போது லஞ்சமாக ரூ.2,000/- கொடுத்தால் தான் மின் இணைப்பை மாற்றம் செய்ய முடியும் என்றும், அப்படி கொடுக்காவிட்டால் தான் அவ்வலுவலகத்தில் பணியாற்றும் வரை புகார்தாரர் மேற்படி மின் இணைப்பை மாற்றி பெற இயலாது எனவும் தெரிவித்துள்ளார். இது சம்மந்தமாக வாதி திரு.P.குமார் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் 12.12.2018-ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் தொடர்ச்சியாக அன்றே பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது மேற்படி மணக்கடவு இளமின்பொறியாளர் திரு.கன்னிமுத்து அவர்கள் வாதி குமாரிடம் தாராபுரம் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலகத்திற்கு எதிரே உள்ள டீக்கடை சந்தில் வைத்து ரூ.2,000/- லஞ்சம் வாங்கிய பொழுது மறைந்திருந்த திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசாரால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.